வளர்நிலை - 6

# சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்

அனைவருக்கும் உயிர் வாழ இன்றியமையாது வேண்டப்படுவது உணவாகும். அவ்வுணவிற்குத் தேவையான அரிசியை விளைவித்துக் கொடுப்பது உழவுத்தொழிலேயோகும். எத்தொழிலைச் செய்வோராயினும், வேறு எப்பொருளை உற்பத்தி செய்வோராயினும் உழவுத் தொழிலால் கிடைக்கும் உணவுப்பொருளைத் தேடி வந்துதான் ஆகவேண்டும். இக்கருத்தைக் கொண்டதுதான் வள்ளுவரின், "**சுழன்றும் ஏர்ப் பின்னதுலகம்**" என்னும் குறட்பா அடி.

இவ்வுலகில் தொழில்கள் பல உள்ளன. அவற்றுள்ளும் உலகோர் உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவை உற்பத்தி செய்து கொடுப்போர் உழவரே ஆவர். அவர்கள் ஏரைக்கொண்டு உழுது, பயிர் விளைத்து, உணவுத்தானியங்களை உலகோர்க்குக் கொடுப்பவர்கள் ஆவர். உலகில் வாழ்வோர் அனைவரும், ஏர்கொண்டு உழுது பொருள் விளைவிக்கும் உழவரின் பின் செல்ல வேண்டியவர்களே ஆவர்.

உலகையே ஆளும் வேந்தனே ஆனாலும், வேட்டையாடும் தொழில் செய்யும் கல்லாத வேடனே ஆனாலும், ஆடைகளை நெய்து தரும் தொழில் செய்வோர் ஆனாலும் அவர் உணவைத் தேடி உண்டிட வேண்டும். ஆகவே, உணவை உற்பத்திசெய்கின்ற உழவனே எல்லோரினும் மேலானவன் எனக் கூறுகின்றார், வள்ளுவர்.

எனவே, உழவுத்தொழிலையும், அத்தொழிலைச் செய்யும் உழவர் பெருமக்கமளையும் போற்றுதல் வேண்டும். அவர்களுக்கு உறுதுணையாய் இருத்தல்வேண்டும்.

நன்றி,
வணக்கம்